நாள் : 15-10-2009

# அரியலூர் வட்டாட்சியர் கூட்ட அரங்கில் கிராம ஊராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

அரியலூர் வட்டாட்சியர் கூட்ட அரங்கில் கிராம ஊராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று பேசியதாவது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மூன்று அடுக்குகளில் மிகவும் அடிப்படையான, முக்கியமான, பொறுப்புகளையுடைய, ஆணிவேரான கிராம ஊராட்சி நிர்வாகம் செம்மையாக செயல்பட்டு வருகிறது. ஊராட்சி மன்றத்தலைவர்கள் மக்கள் கொடுத்தப்பணியாக நினைத்து ஊராட்சியின் வளர்ச்சி பணிகளை செய்ய வேண்டும்.அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர், சாலைகள், தெருவிளக்குகள், வீடுகள், சுகாதாரம், கல்வி, சுற்றுசூழல் மேம்பாடு போன்றவற்றை படிப்படியாக தரத்தோடு உயர்த்த வேண்டும். நிலம், நீர் ஆகிய ஆதாரங்களை கொண்டு உற்பத்தி பெருக்கம், நிலம் நீர்பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு போன்ற பகுதி மேம்பாட்டிற்கு வழிவகை செய்ய வேண்டும். கிராம ஊராட்சிகளில் சாலைகளை அமைத்தல், அத்தகைய சாலைகளில் பாலங்கள் மற்றும் கல்வெர்ட்டுகள் போன்றவற்றை கட்டுதல், தெருக்களை மேம்பாடு செய்து மற்றும் அவ்வப்போது பழுது பார்த்து பராமரிப்பு செய்ய வேண்டும். குடியிருப்பு பகுதிகளில் பொது சாலைகள், தெருக்கள், பொதுமக்கள் கூடுமிடங்கள் போன்ற அவசியமான பகுதிகளில் விளக்குகள் அமைத்து பராமரிக்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதுமான அளவு கிடைக்க வகை செய்தல். நேரடியாகவோ, மேல்நிலை ஊராட்சிகள் அமைப்புகள் மூலமாகவோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ செயல்படுத்துதல். விசைப்பம்புகள், கைப்பம்புகள், பொது குழாய்கள் போன்றவற்றை நிறுவுதல். வாய்ப்புள்ள இடங்களில் வீட்டு இணைப்புகள் வழங்குதல் மற்றும் அத்தகைய குடிநீர் திட்டங்களை செம்மையாக செயல்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் பொது சுகாதாரங்களை மேம்பாடு செய்தல். பொது கழிப்பிடங்களை கட்டுதல், பள்ளிகளில் சுகாதார வசதிகளை நிறுவுதல், வீடுகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள மக்களுக்கு உதவி செய்தல், இதன் மூலம் கிராமப்புற சுற்றுக்சூழல் மாசுப்படுவதை தடுத்து தனிநபர் சுகாதார வசதியை மேம்படுத்த வேண்டும். சாலைகளில் இருபுறமும் மரக்கன்றுகளை நட்டு, கிராம ஊராட்சி தரிசு நிலபுறம்போக்கு மேய்ச்சல் தரை புறம்போக்கு, நத்த புறம்போக்கு மற்றும் சாலை ஓரத்தில் மரக்கன்றுகளை நட்டு பசுமையை வளர்க்க வேண்டும். கிராம ஊராட்சியில் மாதம் ஒருமுறை அல்லது 60 நாட்களுக்குள் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு, அனைத்து உறுப்பினர்களுக்கும் அஜண்டா சார்வு செய்து ஊராட்சி கூட்டம் நடத்தப்படவேண்டும். அனாதை மற்றும் வயது முதிர்ந்தோர் ஆகியோர்களில் தகுதி உள்ளவர்களுக்கு முதியோர் உதவி தொகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். என பேசினார்.

இக்கூட்டத்தில் திட்ட அலுவலர் திரு.வெங்கடாசலம், உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திரு. சடையப்ப விநாயக மூர்த்தி மற்றும் ஊராட்சி மன்றத்தலைவர்கள் மற்றும் ஊராட்சி மன்ற உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்